IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

C.C. 7/2025 Date : 30.01.2026 P.W. 6/LW.7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரஞ்சித் குமார் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | சிங்காரவேலு | தொழில் | உதவி மருத்துவர் |
| கிராமம் | நீலமங்கலம் | வயது | 34 |
| 1முதல் 3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை..**

நான் தற்சமயம் நீலமங்கலத்தில் குடியிருந்து உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில், உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.11.2023 அன்று 5.15 மணிக்கு நான் பணியில் இருந்த போது ராமசாமி த/பெ பொன்னுசாமி வயது 51 செங்குறிச்சியை சேர்ந்தவர் அவர் தானாக மருத்துவமனைக்கு வந்த தன்னை 4 தெரிந்த நபர்கள் தன்னுடைய இல்லத்தில் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்த போது சுயநினைவுடனும், சுற்றுசூழல் அறிந்தும் இருந்தார். மேலும் அவரின் காயங்கள்

1. தலையில் வெட்டு காயம் 3 x 2 x 2,

அவரை புறநோயளியாக சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கருத்துரை வழங்கினேன். **விபத்து பதிவேடு அ.சா.ஆ.3** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. போலிசார் விசாணையில் நான் தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக அ.சா.1 கூறியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் உள்நோயளியாக சேர்த்தேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆயுத்ததால் அ.சா.1 யை தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சிறாய்ப்பு காயம் என்றால் சரிதான்.

2. காயச்சான்றில் காயத்தின் வயதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவம் வீட்டிற்கு உள்ளேயா அல்லது வீட்டிற்கு வெளியேயா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காயம் கடுமையான பகுதியில்

மோதிக்கொள்ளவதால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.01.30 12:56:42 +0600

Judicial Magistrate-I,
Ulundurpet.

Typed by E.veeramani